விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 28 திங்கள் 12.07.2021 மலர் - 2, இதழ் - 97

# இணைய வழி கல்வியில் தமிழகம்



விஜயபாரதம்

கொரோனா பெருந்தொற்று காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக பள்ளிகள் வழக்கம்போல இயங்கவில்லை. இணைய வழியாகவே பாடம் நடத்துவது நடைபெற்று வருகிறது. இந்நிலையில், கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை அறிக்கை 2019 20 ஐ மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்டது. மத்திய அரசு வெளியிட்டுள்ள இந்த UDISE + அறிக்கையில், 'தமிழகத்தில் 80 சதவீதத்திற்கும் அதிகமான அரசுப் பள்ளிகளில் இணைய வசதி இல்லை என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. 17.95 சதவீத அரசு பள்ளிகளில் மட்டுமே இணைய வசதி உள்ளது. மேலும், 'கடந்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில், தமிழக அரசு 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வீடியோக்கள் மூலம் கற்பிக்க முயன்றது, ஆனால் பல பள்ளிகள் கல்வி வீடியோக்களை பதிவிறக்கம் செய்ய முடியாததால் அந்த முயற்சி உதவவில்லை. அரசு உதவி பெறும் பள்ளிகளில்கூட மோசமான இணைய வசதிகள்தான் உள்ளன. அவற்றில், 30 சதவிகிதத்திற்கும் குறைவான பள்ளிகளே இணைய இணைப்பைக் கொண்டுள்ளன. 46 சதவிகிதத்திற்கும் குறைவான பள்ளிகளே செயல்பாட்டில் உள்ள கணினிகளைக் கொண்டுள்ளன. மோசமான இணைய இணைப்பு பிரச்சனையும் பல இடங்களில் உள்ளது. அதே சமயம், தனியார் பள்ளிகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமானவை கணினிகளைக் கொண்டுள்ளன. ஆனாலும் அவற்றில் 75 சதவீதத்திற்கும் அதிகமான பள்ளிகள் மட்டுமே இணைய இணைப்பைக் கொண்டுள்ளன' என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யோகியை புகழும் உலக நாடுகள்



விஜயபாரதம்

யோகி ஆதித்யநாத் தலைமையிலான உத்தரபிரதேச அரசு, கொரோனாவின் முதல் அலை, இரண்டாவது அலைகளை மிகத் திறம்பட சமாளித்ததை பல உலக நாடுகள் புகழ்ந்து வருகின்றன. தங்கள் நாடுகளிலும் அதனை பின்பற்றுகின்றன. அவ்வகையில், ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் கிரேக் கெல்லி, உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் திறமையான தலைமையைப் பாராட்டியுள்ளார். மேலும், அதேபோல திட்டங்களை ஆஸ்திரேலியாவிலும் செயல்படுத்தும் தன் எண்ணத்தை வெளியிட்டார். இதனை உலக சுகாதார அமைப்பு பாராட்டத் தவறியதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதன் உச்சமாக, கொரோனாவை கட்டுப்படுத்த, யோகியை ஆஸ்திரேலியாவின் தலைமையை ஏற்க முடியுமா? எனவும் அவர் கேட்டுள்ளார்.

# அசாமில் மதமாற்றத் தடைச்சட்டம்



விஜயபாரதம்

அசாம் முதல்வர் ஹிமந்த் பிஸ்வாஸ் ஷர்மா, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மதமாற்றத் தடைச் சட்டம் குறித்து கூறுகையில், 'முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஆண்களும்கூட ஹிந்து பெண்களை ஏமாற்றுவது தவறுதான். எனவே வேறு எந்த காரணங்களுக்காகவும் முஸ்லிம், கிறிஸ்தவர், ஹிந்து இளைஞர்கள், பெண்களை ஏமாற்றி திருமணம் செய்தால்கூட இந்த சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்' என கூறினார். மேலும், முஸ்லிம்களை மட்டுமே சுட்டிக்காட்டுவதாக உள்ள 'லவ் ஜிஹாத்' என்கிற வார்த்தையை இந்த சட்டத்தில் தங்கள் அரசு பயன்படுத்தாது என்றும் அவர் தெரிவித்தார்.


# மக்கள் தொகை மசோதா



விஜயபாரதம்

உத்தரபிரதேச மக்கள் தொகை மசோதா 2021'ஐ அம்மாநில சட்ட கமிஷன் இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. இந்த மசோதா குறித்து கருத்து மக்கள் தெரிவிக்கலாம், ஜூலை 19ம் தேதி கடைசி நாள் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. அந்த வரைவு மசோதாவில், 'இரண்டு குழந்தைகள் மட்டும் பெற்று கொண்டவர்களுக்கு, பணிக்காலத்தில் கூடுதலாக 2 இன்க்ரிமென்ட் வழங்கப்படும் அல்லது பேறு கால விடுமுறை 12 மாதம் முழு சம்பளத்துடன் வழங்கப்படும். தேசிய பென்ஷன் திட்டத்தில் ஊழியர்களின் பங்களிப்பில் கூடுதலாக 3 சதவீத படி உயர்த்தி வழங்கப்படும். அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு மையங்கள் அமைக்க வேண்டும். இந்த மையங்கள், தொண்டு நிறுவனங்கள் இணைந்து கருத்தடை மாத்திரை உள்ளிட்ட கருத்தடை சாதனங்களை விநியோகம் செய்வதுடன், குடும்பக் கட்டுப்பாடு முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கர்ப்பிணிகள், குழந்தை பிறப்பு மற்றும் இறப்பு ஆகியவற்றை பதிவு செய்வதை கட்டாயமாக்க வேண்டும். மக்கள் தொகை கட்டுப்பாடு குறித்து உயர்நிலை வகுப்பில் பாடம் ஒன்றை சேர்க்க வேண்டும். 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றவர்கள் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்படும். அரசு வேலைக்கு விண்ணப்பிக்க முடியாது. அரசு ஊழியர்களுக்கு பதவி உயர்வும் கிடையாது' என கூறப்பட்டு உள்ளது.

# டுவிட்டர் புதிய அதிகாரி



விஜயபாரதம்

சமூக வலைத்தளங்கள், ஓ.டி.டி தளங்களுக்கான புதிய விதிமுறைகளை கடைபிடிக்காமல் தொடர்ந்து முரண்டு ப்பிடித்து வந்த டுவிட்டர், மத்திய அரசின் எச்சரிக்கை, நீதிமன்ற கண்டனம் ஆகியவற்றைத் தொடர்ந்து தற்போது, டுவிட்டரின் இந்தியப்பிரிவு குறைதீர்ப்பு அதிகாரியாக வினய் பிரகாஷ் என்பவர் நியமிக்கப்பட்டு உள்ளதாக அறிவித்து உள்ளது.

# பா.ஜ.க. அமோக வெற்றி

உ.பி.,யில் 74 மாவட்டங்களில் நடந்த மண்டல பஞ்சாயத்து தேர்தலில் 635 இடங்களில் பா.ஜ.க மற்றும் அப்னா தளம் கட்சிகள் கைப்பற்றி உள்ளன. இதில், பா.ஜ.க வேட்பாளர்கள் 334 பேர் போட்டியின்றி வெற்றி பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 'ஒருங்கிணைந்த வளர்ச்சி என்ற பிரதமர் மோடியின் கொள்கைக்கு மக்கள் அளித்த அங்கீகாரம் இது' என அம்மாநில முதல்வர் யோகி ஆதித்தியநாத் தெரிவித்தார். இத்தேர்தலில், சமாஜ்வாதி கட்சி 70 இடங்களிலும், காங்கிரஸ் 2 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.

விஜயபாரதம்



# பரிந்துரைப்போம் பத்ம விருதுக்கு



விஜயபாரதம்

பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில், 'களப்பணிகளில் சிறப்பான செயல்களை செய்யும் பலர் பாரதத்தில் உள்ளனர். ஆனால், அவர்கள் குறித்து நாம் அதிகமாக அறிவதில்லை. உங்களுக்கு இப்படிப்பட்ட சாதிக்கத் தூண்டும் நபர்களை தெரியுமா? அப்படி தெரிந்திருந்தால், மக்களின் பத்ம விருதுகளுக்காக அவர்களை நீங்கள் பரிந்துரைக்கலாம். https://padmaawards.gov.in என்ற இணையதளத்தில் வரும் செப்டம்பர் 15ம் தேதி வரை நீங்கள் உங்களின் பரிந்துரைகளை அனுப்பலாம்' என தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதிகள் கைது



விஜயபாரதம்

உத்தர பிரதேசத்தில் லக்னோவின் ககோரி பகுதியில் அல்கொய்தாவின் 'அன்சார் கஜ்வட் உல் ஹிந்த்' அமைப்புடன் தொடர்பு உள்ள பயங்கரவாதிகள் பதுங்கியுள்ளதாக, பயங்கரவாத தடுப்பு காவலர்களுக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து அவர்கள், அங்கு சென்று சோதனை செய்து மினாஜ் அகமது மற்றும் மஸ்ருதீன் ஆகியோரை கைது செய்தனர். அவர்கள், லக்னோவில் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தாக்குதல் நடத்த திட்டமிட்டது விசாரணையில் தெரியவந்தது.

# ஜி.எஸ்.டி. மோசடி 23 நிறுவனங்கள் சிக்கின

மேற்கு டெல்லியில் பிரபலமான 19 நிறுவனங்கள் உள்பட 23 நிறுவனங்கள் போலியான உள்ளீட்டு வரி கடனைப் பயன்படுத்தி, உண்மையான ஜி.எஸ்.டி வரியை அரசுக்கு செலுத்தத் தவறியுள்ளன. தற்போதைய நிதியாண்டில் மட்டும் ரூ. 91.256 கோடி மோசடி நடைபெற்று உள்ளது. உளவுப் பிரிவு தகவலை அடுத்து, இதனை அதிகாரிகள் திடீர் ஆய்வு செய்து கண்டுபிடித்தனர். மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜி.எஸ்.டி வரி ஏய்ப்பை சரிபார்க்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

விஜயபாரதம்



# பயங்கரவாத ஆதரவு அரசு ஊழியர்கள் நீக்கம்



விஜயபாரதம்

ஜம்மு காஷ்மீர் அரசு, அதன் 11 ஊழியர்களை அதிரடியாக பணி நீக்கம் செய்துள்ளது. அவர்கள் பயங்கரவாத செயல்களுக்கு ஆதரவு அளித்தது, நிதயுதவி செய்தது, அதனை பரப்புவது, ரகசியத் தகவல்களை பயங்கரவாதிகளுக்கு அளிப்பது உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்டது தெரியவந்ததை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. முக்கியமாக, ஹிஸ்புல் முஜாஹிதீன் நிறுவனர் சையத் சலாஹுதீனின் மகன்களான சையத் அஹ்மத் ஷகீல் மற்றும் ஷாஹித் யூசுப் ஆகியோரும் பயங்கரவாத நிதியுதவியில் ஈடுபட்டது கண்டறியப்பட்டதால் அவர்களும் நீக்கப்பட்டுள்ளனர். மேலும், பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் இரண்டு கான்ஸ்டபிள்கள், மின் துறை ஆய்வாளர், சுகாதாரத்துறை ஊழியர், வேளாண்மை அலுவலர், இரண்டு ஆசிரியர்கள் அடங்குவர்.

# வெளியேறும் இந்தியர்கள்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க ராணுவம் வெளியேறுவதைத் தொடர்ந்து தாலிபான்கள் பல பகுதிகளைக் கைப்பற்றி வருகின்றனர். இந்நிலையில் அங்கு இருக்கும் ஐநூறுக்கும் மேற்பட்ட இந்தியர்களின் பாதுகாப்புக் கேள்விக்குறியாகி உள்ளது. எனவே, பாரதம் தன் தூதரக ஊழியர்களை வெளியேற்றி வருகிறது. ஹெராத் மற்றும் ஜலாலாபாத்தில் உள்ள இரண்டு தூதரகங்கள் அங்கு தனது செயல்பாட்டை நிறுத்திவிட்டன. எனினும், காந்தஹாரிலும் காபூலிலும் அவசரகால சேவைகளுக்காக தூதரகங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

# ஆப்கன் குறித்து அமெரிக்கா கணிப்பு



விஜயபாரதம்

அமெரிக்க ராணுவம் ஆப்கானிஸ் தானை விட்டு வெளியேறி வரும் சூழலில், தாலிபான் பயங்கரவாதிகள் அந்த நாட்டின் எல்லைப்புற மாகாணங்களை வேகமாக கைப்பற்றி வருகின்றனர். அமெரிக்க வல்லுனர்களின் கருத்துப்படி, ஆப்கானிய அரசு அதிகபட்சம் ஆறு மாதங்கள் தாக்குப் பிடிக்கலாம். ஒருவேளை போர் தீவிரமானால், ஆப்கன் ராணுவத்தினர் அதற்குள்ளாகவே தங்களை காத்துக்கொள்ள பின்வாங்கிவிடவும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று கவலை தெரிவித்துள்ளனர்.


# பென்ஷன் அதாலத்



விஜயபாரதம்

தொழிலாளர் ஒய்வூதிய திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் எடுக்க விரும்புவோர்களுக்காக, 'பென்ஷன் அதாலத்' என்ற குறை தீர்க்கும் முகாமை, வரும் ஜூலை 20ம் தேதி மாலை 3:30 மணிக்கு சென்னை ராயப்பேட்டையில் உள்ள மண்டல அலுவலகத்தில் நடத்த தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் முடிவு செய்துள்ளது. ஒய்வூதியம் பெறுவதற்கான ஆணையைப் பெற்ற ஒய்வூதியதாரர்கள், தங்கள் ஒய்வூதியம் தொடர்பான குறைகளை 'பென்ஷன் அதாலத்' என்று குறிப்பிட்டு, pension.rochn1@epfindia.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு வரும் 16ம் தேதி மாலை 5:00 மணிக்குள் அனுப்ப வேண்டும். அதில் தங்களுடைய பெயர், வருங்கால வைப்பு நிதி கணக்கு எண், அலைபேசி எண், உள்ளிட்ட விவரங்களை குறிப்பிட வேண்டும். இணைய வழியில் நடத்தப்படவிருக்கும் இந்த குறை தீர்ப்பு முகாமில் கலந்துகொள்வதற்கான இணைப்பு அந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் என்று செய்தி குறிப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

# அமெரிக்கர்கள் நம்பும் கொரோனா பரவல்


விஜயபாரதம்

சீனாவில் வுஹான் ஆய்வகத்தில் இருந்து வைரஸ் கசிந்ததைக் குறிக்கும் பல சான்றுகள் வெளியாகியுள்ளன. இருப்பினும், சீனா அதைத் தொடர்ந்து மறுத்து வருகிறது. மேலும், உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் குழுவை அது ஆய்வகத்தில் அனுமதிக்கவில்லை. இந்நிலையில், கொரோனா பரவல் தொடர்பாக, அமெரிக்க ஹார்வர்ட் பல்கலைக்கழகம் ஒரு ஆய்வை நடத்தியது. இதில், 52 சதவீதம் பேர் சீனாவின் வுஹான் இன்ஸ்டிடியூட் ஆப் வைராலஜி ஆய்வகத்தில் இருந்துதான் கொரோனா பரவியிருக்கும் என நம்புவதாகத் தெரிவித்தனர். சிறிது காலம் முன்புவரை, இந்த கோட்பாடு வலதுசாரிகளின் திணிப்பு என கருதப்பட்டது. ஆனால், தற்போது குறிப்பிடத்தக்க வகையில், சம எண்ணிக்கையிலான குடியரசுக் கட்சியினரும் ஜனநாயகக் கட்சியினரும் இந்த கோட்பாட்டை நம்புகிறார்கள். முன்னதாக, இங்கிலாந்தில் நடைபெற்ற ஜி 7 நாடுகள் உச்சி மாநாட்டில், வைரஸின் தோற்றம் குறித்த விசாரணையில் பங்கேற்க சீனாவுக்கு அந்த நாடுகள் அழைப்பு விடுத்தன என்பதும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், அமெரிக்க உளவுத்துறை இது குறித்து விசாரித்து ஒரு விரிவான அறிக்கையை அடுத்த மாத இறுதிக்குள் அவரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# டெல்டாவை தடுக்காத சினோவேக்




விஜயபாரதம்

தாய்லாந்து, துருக்கி, பாகிஸ்தான், பிரேசில், பிலிபைன்ஸ் உள்ளிட்ட சில நாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் சீனாவின் கொரோனா தடுப்பூசியான சினோவேக், கொரோனாவின் டெல்டா வகை வைரசை தடுக்க தகுதி இல்லாதது என தாய்லாந்தின் செஞ்சிலுவை சங்கம், தொற்று நோய்கள் சுகாதார அறிவியல் மையம் மற்றும் பயோடெக்கின் வைராலஜிஸ்ட் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. இந்த ஆய்வு முடிவுகள் சினோவேக்கை பயன்படுத்தும் நாடுகளின் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதே ஆய்வில், அஸ்ட்ராஜெனகாவின் 2 டோஸ் தடுப்பூசிகள், டெல்டா வைரசை எதிர்ப்பதில் சிறப்பாக செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசிகள், பாரதத்தில், 'கோவிஷீல்ட்' என்ற பெயரில் தயாராவது குறிப்பிடத்தக்கது. முன்னதாக, கடந்த மாதம், சீனாவின் நோய்கள் மற்றும் தடுப்பு மருந்துகள் ஆராய்ச்சியாளரான ஃபெங் ஜிஜியான் நடத்திய ஆய்வில், சீன தடுப்பூசிகளான சினோபார்ம் மற்றும் சினோவேக் ஆகியவை கொரோனாவின் டெல்டா வகை வைரசை எதிர்க்கும் திறனற்றவை என்று தெரிவித்தார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

# எனது மூதாதையர்கள் ஹிந்துக்கள்



விஜயபாரதம்

ஹிந்துக்களை ஆசை காட்டி, ஏமாற்றி, கடத்தி, மிரட்டி, காதலித்து என பல்வேறு வகைகளில் முஸ்லிமாக மாற்றும் போக்கு தற்போது தேசமெங்கும் பரவலாக அதிகரித்து வருகிறது. சமீபத்தில் உத்தர பிரதேசத்தில் மாற்றுத் திறனாளிகள் உட்பட ஆயிரக்கணக்கானோரை முஸ்லிம்கள் மதமாற்றம் செய்தது கண்டறியப்பட்டது. இதற்கு பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ உளவு அமைப்பு, பயங்கரவாதிகள் ஆதரவு, வெளிநாட்டு நிதியுதவி என பல்வேறு வழிகளில் ஆதரவு இருந்ததும் தெரியவந்தது.

இந்நிலையில், இது குறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய, பீகார் மாநில சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஜமா கான், தனது மூதாதையர்கள் ராஜஸ்தானைச் சேர்ந்த ஹிந்துக்கள், ரஜபுத்திர வம்சத்தினர். தனது தாத்தா வழி மூதாதையரான பகவான் சிங் முஸ்லிமாக மதம் மாறினார். ஆனால், அவரது தம்பி ஜெய் ராம் சிங் ஹிந்துவாகவே வாழ்ந்தார். அவரது வழித்தோன்றல்கள் இன்னும் ஹிந்துக்களாகவே சாரையா கிராமத்தில் வசித்து வருகின்றனர் என தெரிவித்தார். மேலும், பெரும்பான்மையான முஸ்லிம்கள், எங்களின் பா.ஜ.க ஜே.டி.யு தலைமையிலான என்.டி.ஏ கூட்டணிக்கு வாக்களிக்கவில்லை என்றாலும், முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காக எங்கள் அரசு பல்வேறு நலதிட்டங்களை செயல்படுத்தி வருகிறது என தெரிவித்தார்.

# சட்டவிரோத வங்கதேசத்தவர் கைது



விஜயபாரதம்

பெங்களூருவில் சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்ட வங்கதேசப் பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட வழக்கில், வங்க தேசத்தை சேர்ந்த ஷோபூஜ் ஷேக், ரபீக், ரிடோய் பாபு, ராகிபுல் இஸ்லாம் சாகர், முகமது பாபு ஷேக், ஹகில், அஜிம், ஜமால், தலிம், நஸ்ரத், காஜல், தான்யா ஆகிய வங்க தேசத்தவர்கள் கைது செய்யப்பட்டனர். அந்த பெண்ணை வேலை வாங்கித் தருவதாக அழைத்துவந்து பாலியல் சித்ரவதை செய்து அதனை வீடியோ எடுத்து பரப்பியுள்ளனர். இந்த கைது குறித்து பெங்களூரு காவல் ஆணையர் கமல் பந்த் கூறுகையில், கைது செய்யப்பட்டவர்கள் மீதான விசாரணையை 5 வார காலத்திற்குள் முடித்துவிட்டதாகவும், 1019 பக்க குற்றச்சாட்டு ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும் கூறினார். மேலும், இந்த விரைவாக செயல்பட்ட விசாரணைக் குழுவைப் பாராட்டி அந்த அணிக்கு ரூ. 1 லட்சம் வெகுமதி வழங்கப்படுவதாக அறிவித்தார்.

# ஹாங்காங் கழுத்தை நெறிக்கும் சீனா




சீனாவால் கடந்த 2020 ஜூனில் ஹாங்காங் மீது திணிக்கப்பட்ட தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பெரும்பாலான ஹாங்காங்வாசிகள், சீனாவின் முழுமையான ஆதிக்கத்தின் கீழ், தங்களது எதிர்காலம் குறித்து சந்தேகம் அடைந்துள்ளனர்.

**எதிர்காலம் குறித்த கவலை:**

தைப்பே டைம்ஸ் கருத்துக் கணிப்பின்படி, இந்த கடுமையான சட்டத்தின் கீழ் 60 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் தங்கள் எதிர்காலம் குறித்து சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

**மக்கள் சுதந்திரம்:**

ஹாங்காங்கை சீனாவுக்கு ஒப்படைத்ததன் 24வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் ஒரு அறிக்கையை அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் 'ஃபிரீடம் ஹௌஸ்' வெளியிட்டது. அதில், உலகில் மக்கள் சுதந்திரம் குறித்த மதிப்பீட்டில், ஹாங்காங்கிற்கு மிக மோசமான மதிப்பீடாக 52 புள்ளிகள் கொடுக்கப்பட்டிருந்தது.

**தொடர் கைது:**

ஹாங்காங் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், ஹாங்காங்கில் உள்ள சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள் உட்பட பலர் கடந்த சில மாதங்களில் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

**ஊடக சுதந்திரம்:**

சீன அரசிற்கு சாதகமான ஊடகங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்ட ஊடகங்களாக அறிவிக்கப்படுகின்றன. அவற்றின் தொழிலாளர்களை மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட ஊடக பிரதிநிதிகளாக மறுவரையறை செய்யப்படுகின்றனர். ஆப்பிள் டெய்லி பத்திரிகையின் உரிமையாளர் மற்றும் அதன் நிர்வாகிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். பல செய்தி நிறுவனங்கள் அமைதியாக்கப்பட்டுள்ளன. ஸ்டாண்ட் நியூஸ், வினான்ட்மேக் மீடியா மற்றும் போஸ்ட் 852 போன்ற ஆன்லைன் வெளியீடுகளில் சீனா குறித்த முந்தைய பதிவுகள் அகற்றப்படுகின்றன.

**கல்வி சுதந்திரம்:**

சீனாவை விமர்சிக்கும் கல்வியாளர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அல்லது வெளியேற்றப்பட்டுள்ளனர். கடந்த பிப்ரவரியில் கல்வி பாடத்திட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. கல்வி வளாகங்களில் அரசியல் நடவடிக்கைகளை சட்டவிரோதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் தங்கள் அரசியல் கருத்துக்களைப் பற்றி விவாதிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பாதுகாப்புச் சட்டம் குறித்த கல்வியை 8,000 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சர்வதேச கல்வியாளர்கள், மாணவர்கள் பறிமாற்ற திட்டங்கள் குறைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்வது அல்லது நிறுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

**கலையில் கைவைத்த சீனா:**

ஹாங்காங் திரைப்படதணிக்கைத்துறை, தேசபாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் திரைப்படங்கள் தடை செய்யப்படும் என அறிவித்துள்ளது. இந்த தணிக்கை இணையம், கலை, கலாச்சாரம் உட்பட அனைத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**தியான்மென் நிகழ்ச்சி ரத்து:**

தியான்மென் சதுக்க படுகொலையை நினைவுபடுத்தும் விதமாக கடந்த 30 வருடங்களாக அனுசரிக்கப்பட்ட

மெழுகுவர்த்தி ஏற்றுதல், பொதுக் கூட்டங்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன.

**புதிய குடியேற்ற விதிமுறைகள்:**

கடந்த ஏப்ரலில் அறிவிக்கப்பட்ட ஹங்காங் குடியேற்ற விதிமுறை மாற்றங்கள் ஆகஸ்ட் 1 முதல் நடைமுறைக்கு வரும்போது, தனிநபர்கள் ஹாங்காங்கிற்குள் நுழைவதையோ அல்லது வெளியேறுவதையோ தடைசெய்யும் அதிகாரத்தை சீனா முழுமையாக பெறும். இதனால், இயக்க சுதந்திரம் கூட பாதிக்கப்படலாம் என கருதப்படுகிறது.

**தேச துரோகம்:**

சீனாவிலிருந்து விலகுதல், சீன அரசின் அதிகாரத்தை குறைத்து மதிப்பிடுதல், வெளி நாட்டு சக்திகளுடன் கூட்டு சேருதல் என சீன அரசு கருதும் அனைத்தும் பிரிவினை முயற்சியாகக் கருதப்படும். அதற்கு கடுமையான சிறைவாசம் முதல் ஆயுள் தண்டனை வரை விதிக்கப்படும்.

மதிமுகன்

# காகித பைகள் தினம்



பிளாஸ்டிக் மாசுபாட்டைக் குறைக்க உதவும் பிளாஸ்டிக்கிற்கு பதிலாக காகிதப் பைகளைப் பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை பரப்ப, ஜூலை 12 அன்று காகிதப் பைகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

பிளாஸ்டிக் கழிவுகள் சிதைவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகும். அதிலும், ஒற்றை பயன்பாட்டு பிளாஸ்டிக் பைகளால் ஏற்படும் மோசமான விளைவுகளை நாம் புரிந்துகொள்வது அவசியம்.

காகித பைகள் புதுப்பிக்கத்தக்க மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. அவை மறுசுழற்சி செய்யக்கூடியவை மற்றும் மக்கும் தன்மை கொண்டவை. அதே சமயம் முறையாக வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டால் அவை வலிமையானவையும்கூட.

காகிதப் பைகள் கிட்டத்தட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன என்பதில் சந்தேகமில்லை. சுற்றுச்சூழல் மாசுபாட்டைக்கட்டுப்படுத்த உதவும்காகிதத்தால் ஆன பைகளை பலரும் தினமும் பயன்படுத்துகின்றனர்.

உலகமயமாக்கல், காலநிலை மாற்றம் மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறை காரணமாக மக்கள் நிலையான வாழ்க்கை முறை தேர்வுகளை பின்பற்றுகிறார்கள், அவற்றில் காகிதப் பைகளும் ஒன்று.


காகிதப் பைகளைப் பயன்படுத்துவது என்பது, எதிர்கால சந்ததியினருக்கு நமது பூமியை நாம் பாதுகாப்பாக ஒப்படைக்கும் முயற்சியில் ஒரு முக்கிய மைல்கல் என்றால் அது மிகை அல்ல. பல நாடுகளில், காகிதப் பை நாள் வெவ்வேறு தேதிகளில் கொண்டாடப்படுகிறது.

1852ம் ஆண்டில், ஒரு அமெரிக்க கண்டுபிடிப்பாளர் பிரான்சிஸ் வோல் முதல் காகிதப் பை தயாரிக்கும் இயந்திரத்தை நிறுவினார். 1871ம் ஆண்டில், மார்கரெட் ஈ. நைட் தட்டையான கீழ்பாகம் கொண்ட காகிதப் பைகளை தயாரிக்கக்கூடிய மற்றொரு இயந்திரத்தை வடிவமைத்தார். 1883ம் ஆண்டில், சார்லஸ் ஸ்டில்வெல், மடித்து சேமிக்க வசதியான சதுரமான அடிபாகத்துடன் கூடிய காகிதப் பைகளை தயாரிக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்தார். 1912ம் ஆண்டில், வால்டர் டியூபனர் காகிதப் பைகளை வலுப்படுத்தவும், சுமந்து செல்லும் கைப்பிடிகளைச் சேர்க்கவும் ஒரு தண்டு பயன்படுத்தினார். இப்படி பல ஆண்டுகளாக, பல கண்டுபிடிப்பாளர்கள் காகித பைகள் உற்பத்தியை மேம்படுத்தினர்.

சுகவனேஸ்வரன்

விஜயபாரதம் தேசிய வார இதழ்
சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
93613 99006

# எளிமை தினம்




விஜயபாரதம்

எளிமையின் வாழ்க்கையை ஆதரிக்கும் ஹென்றி டேவிட் தோரூ ஹென்றி டேவிட் தோரே 1817 ஜூலை 12ல் பிறந்தார். அவரை கௌரவிக்கும் விதமாக அமெரிக்காவில், ஆண்டுதோறும் ஜூலை 12ம் தேதி தேசிய எளிமை தினம் கொண்டாடப்படுகிறது.

ஹென்றி டேவிட் தோரே ஒரு அமெரிக்க எழுத்தாளர், சுற்றுச்சூழல் ஆர்வலர், தத்துவவாதி, இயற்கை ஆர்வலர், கவிஞர், வரலாற்றாசிரியர், சர்வேயர் மற்றும் ஒரு ஆழ்நிலை நிபுணர். அவர் எழுதிய வால்டன் என்ற புத்தகத்திற்காக பிரபலமானவர்.

ஹென்றி டேவிட் தோரே, ஒரு நில உரிமையாளரின் அனுமதியுடன் இரண்டு ஆண்டுகளில் அவரே அங்கு தனது சொந்த அறையை கட்டியெழுப்பினார். உணவிற்காக காய்கறிகளை பயிரிட்டார். அருகில் உள்ள காடுகளில் இயற்கையாக ஒரு எளிய வாழ்க்கையை வாழ்ந்தார். இயற்கையிலிருந்து பல அனுபவங்களைப் பெற்றார். இந்த அனுபவங்கள் அவர் வால்டன் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை பாரதத்தில் உள்ள நமது முன்னோர்கள், ‘சிறுகக் கட்டி பெருக வாழ்’ ’சிறுதுளி பெரு வெள்ளம்’ என எப்போதோ கூறிவிட்டனர்.

**வாழ்க்கையை எளிமையாக வாழ ஒரு சில குறிப்புகள்:**


நவீன தொழில்நுட்பம், தேவையற்ற மன அழுத்தத்திலிருந்து சற்றே விலகி, வாழ்க்கையை ஒரு எளிய வழியில் அனுபவிக்க முயற்சிப்போம். தேவை இல்லாமல் வாழ்க்கையை சிக்கலாக்க வேண்டாம். பிஸியான வாழ்க்கைமுறையில் இருந்து சற்றே விலகி, வாழ்க்கையை எளிமைப்படுத்துவதற்கான வழிகளைப் ஆராய்வோம். தேவையற்ற சுமைகளை மனதிலும் வீட்டிலும் வாழ்க்கையிலும் இருந்து இனியும் சுமக்க வேண்டாம். அவற்றை தூர எறிவோம். நாம் நம் வாழ்க்கையை எளிமைப்படுத்தும்போது, பிரபஞ்ச விதிகளும் நமக்கு எளிமையாக மாறும்.

எதற்காகவும் வாழ்க்கையை சிக்கலாக்க வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு பிரச்சினைக்கும் கண்டிப்பாக தீர்வு உள்ளது. வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளில் மட்டும் கவனம் செலுத்துவோம். அடுத்தவரை பார்த்து பொறாமைப் படுவதை நிறுத்திடுவோம். நமது மனதும் வீடும் எளிமையாக இருக்கட்டும். எது முக்கியமானது என்பதில் தெளிவு பெறுவோம். முடிந்தவரை தொழில்நுட்பத்திலிருந்து விலகி வாழ பழகிக் கொள்வோம். ஏனெனில் மற்ற சுமைகளைவிட தகவல்சுமைதான் தற்போது அனைவருக்கும் பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

நந்தனா சதீஷ் – கலிபோர்னியா, அமெரிக்கா

# வலையில் சிக்கிய மீம்கள்






பாரதி சேவா சங்கம்

# ONLINE CHESS TOURNAMENT

Sadurangam GM Chess Academy

## CONDUCTED BY "BHARATI SEVA SANGAM & SADURANGAM GM CHESS ACADEMY"

## 25 JULY 2021 ,1:00 PM

* Age limit- under 15
* Format- Swiss
* No of Rounds- 7
* Time control- 10+0
* Last date for registration-20 July 2021
*No Registration fees

**Participants share the Name & Contact number to this number- 9176727956 (whatsapp only)**

To register, go to the below link https://forms.gle/MsDzBLdtgGrFbUNR9



**Participation Certificate will be issued**